செ.வெ.எண்: 254 நாள்:29.07.2021

## வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

## தொழிற்பயிற்சி நிலையங்களில் (ITI) சேர்க்கை அறிவிப்பு

அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் தொழிற் பயிற்சி மையங்களில் அரசு ஓதுக்கீட்டு இடங்களில் இந்த ஆண்டிற்கான (2021) மாணவர் சேர்க்கைக்கான விண்ணப்பங்களை 8ம் வகுப்பு மற்றும் 10ம் வகுப்பு படித்து தேர்ச்சி பெற்றவர்கள் இணையதளம்(online) மூலம் விண்ணப்பிப்பதற்கான **நாள் 04.08.2021 வரை தற்பொழுது நீட்டிப்பு** செய்யப்பட்டுள்ளது. விண்ணப்பிக்க வேண்டிய இணையதள முகவரிwww.skilltraining.tn.gov.in

மேற்கண்ட இணையதளத்தில் விண்ணப்பிக்க தங்கள் இருப்பிடத்திற்கு அருகாமையில் உள்ள Computer Centre மூலம் விண்ணப்பிக்கலாம். முடியாதவர்கள் அரசு தொழிற் பயிற்சி நிலையம் பேட்டை,அம்பாசமுத்திரம் மற்றும் இராதாபுரம்,DSTO அலுவலகம் பேட்டை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள ஐடிஐ சேர்க்கை உதவி மையங்களை (IAFCS) அணுகி விண்ணப்பிக்கலாம்.

இந்த இணையதளம் வாயிலாக விண்ணப்பிப்பதின் மூலம். அவர் தமிழ்நாட்டில் உள்ள எந்த ஒரு தொழிற் பயிற்சி நிலையத்திலும் சேர்க்கை பெறலாம். தமிழகத்தில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களின் விபரங்கள், தொழிற் பிரிவுகள். தேவையான கல்விதகுதி, வயதுவரம்பு, இடஒதுக்கீடு ஆகியன இணையதளத்தில் உள்ள விளக்க கையேட்டில் (PROSPETUS) கொடுக்கப்பட்டுள்ளது.

அரசு ஐடிஐ-ல் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் எந்த பாகுபாடு இன்றி மாதம் ரூ.750/-வீதம் உதவித் தொகை வழங்கப்படும். மேலும் பயிற்சியின் போது LAPTOP மிதிவண்டி (CYCLE) வருடத்திற்கு இரண்டு சீருடைகள் ஒரு ஜோடி காலணி NIMI பாட புத்தகங்கள், வரைபட கருவிகள் ஆகியவைகள் விலையில்லாமல் வழங்கப்படும்.மாணவர்கள் பயிற்சி நிலையத்திற்கு வந்து செல்ல இலவச பஸ்பாஸ் மற்றும் சலுகை கட்டணத்தில் ரயில் பாஸ் வழங்கப்படும்.

அரசு ஐடிஐ படிக்கும் மாணவர்களுக்கு மத்திய மற்றும் மாநில அரசுப்பணி முன்னணி அரசு நிறுவனங்கள் மற்றும் தனியார் நிறுவனங்களில் அதிக வேலை வாய்ப்பு உள்ளது. இளைஞர்கள் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி நல்ல வேலை வாய்ப்பினை பெற்று தங்களது வாழ்க்கையை நன்றாக அமைத்து கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம். திருநெல்வேலி.**